DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE CHIEF JUDICIAL MAGISTRATE, SIVAGANGAI.

| | | |
|---|---|---|
| Case No. | : | S.C. 104/2017 |
| Deposition of Witness for | : | P.W. 1 |
| Name | : | **சையது முகம்மது** |
| Father's Name | : | **அப்துல் தாரிக்** |
| Village | : | |
| Taluk | : | |
| Calling | : | |
| Age | : | **65/2026** |

**(வழக்கின் எதிரி ஆஜர். )**

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1973 of the day of 10.02.2026

**<u>முதல் விசாரணை:</u>**

1. நான் தற்போது இளையான்குடி - பரமக்குடி சாலையில் குடியிருந்து வருகிறேன். சம்பவ காலத்தின்போது இளையான்குடியில் சுல்தான் அலாவுதீன் தெருவில் குடியிருந்தேன். வழக்கின் ஆஜர் எதிரியான அப்துல் காசிம் என்ற பீடா காசிம் என்பவரை எனக்கு தெரியும். சாட்சி ஜாகீர்உஷேன் எனது சகளை ஆவார்.சாட்சி சையது அப்தாகிர் சாட்சி ஜாகீர்உஷேனின் தம்பி ஆவார். கடந்த 24.05.2008 ம் தேதி மதியம் சுமார் 12.00 மணியளவில் பரமக்குடி ரோட்டில் நான் வந்துகொண்டிருந்தேன். அப்போது 3, 4 நபர்கள் காரில் வந்து இறங்கி பாட்டில்களால் என்னை தாக்கினார்கள். எனக்கு அவர்கள் தாக்கியதில் இடதுபக்க தாடை அருகே காயம் ஏற்பட்டது. காரில் வந்து தாக்கிய நபர்கள் யார் என்று தற்போது ஞாபகமில்லை.

2. என்னுடைய சகளை ஜாகீர்உஷேனுக்கு எப்படி காயம் ஏற்பட்டது என்று எனக்கு தெரியாது. நான் எனக்கு ஏற்பட்ட காயங்களுக்காக இளையான்குடி அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்கு சென்றேன். நான் இச்சம்பவம் குறித்து இளையான்குடி காவல்நிலையத்தில் புகார் மனு கொடுத்தேன். தற்போது நீதிமன்றத்தில் என்னிடம் காட்டப்படும் புகார் மனு நான் இளையான்குடி காவல்நிலையத்தில் கொடுத்தது தான். நான் புகார் மனுவில் எதிரிகள் குறித்து புகார் எதுவும் கூறவில்லை. தற்போது காட்டப்படும் புகார் மனுவில் உள்ள சையது முகம்மது என்ற கையொப்பம் என்னுடையது தான். அந்த **கையொப்பம் மட்டும் அ.த.சா.ஆ.1** ஆகும். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**(அரசுதரப்பில் சாட்சியை பிறழ்சாட்சியாக அனுமதிக்கும்படி அனுமதி வேண்டப்பட்டதன் அடிப்படையில் அனுமதி வழங்கப்பட்டது.)**

**அரசுத்தரப்பில் குறுக்குவிசாரணை** :

**1.** போலிசார் இவ்வழக்கு சம்மந்தமாக விசாரித்தார்கள் என்றும் விசாரணையின் போது இவ்வழக்கு சம்பவத்தின்போது எனது சகளையான ஜாகீர்உஷேனுக்கும் எதிரிகளுக்கும் இடையே கொடுக்கல் வாங்கல் சம்மந்தமாக பிரச்சினை இருந்தது என்றும் 24.05.2008 ம் தேதி மதியம் 1.00 மணியளவில் நான் இளையான்குடி நஜீமுதீன் பெட்ரோல் பங்க் அருகே சிறுநீர் கழிப்பதற்காக வந்தபோது எதிரிகள் என்னை அசிங்கமான வார்த்தைகளால் திட்டி எதிரி சுபேதார் அலி என்னை உடைந்த பாட்டிலால் எனது இடது பக்க நாடியில் குத்தி காயப்படுத்தினார் என்றும் தடுக்க வந்த எனது சகளை ஜாகீர்உஷேனின் காரை மடக்கி பிடித்து அவரையும் தாக்கி காயப்படுத்தினார் என்றும் மேலும் ரூ.5000/- மதிப்புள்ள செல்போனையும் எதிரிகள் பறித்துக்கொண்டு சென்றுவிட்டார்கள் என்றும் சம்பவம் குறித்து இளையான்குடி காவல்நிலையத்தில் புகார் மனு கொடுத்தேன் என்றும் சொன்னால் சரியல்ல.

2. தற்போது நானும் எதிரிகளும் சமாதானம் ஆகிவிட்டோம் என்றால் சரிதான். தற்போது எதிரிகளுடன் சமாதானம் ஆகிவிட்டதால் வழக்கு சம்பவத்தை மறைத்து அவர்களுக் சாதகமாக பொய்யான சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறு விசாரணை**: இல்லை

N SENTHIL MURALI

Digitally signed by N SENTHIL MURALI
Date: 2026.02.10 14:20:27

**உதவி அமர்வு நீதிபதி,**

**தலைமைக் குற்றவியல் நடுவர் ,**

**சிவகங்கை..**